DM CUM COURT, KUNNAM

# DEPOSITION OF WITNESS
## IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM

| **C.C.No. 115 /2024 , Mangalamedu P.S. PW -4.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி. நளினி | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | தர்மராஜ் | Calling | : | காவல் ஆய்வாளர் |
| Village | : | மங்களமேடு | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 42 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.06.2026. | | | | | |

4–ம் ஆஜர். 1,2,3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :-

1. நான் தற்போது மங்களமேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 16.05.2023 ம் தேதி அன்று மங்களமேடு காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக திரு. நடராஜன் என்பவர் பணியில் இருந்தார். அவர் தற்போது பணி மாறுதல் பெற்று வேறு மாவட்ட காவல் நிலையத்தில் பணி செய்து வருவதாலும், அ.சா.1 மற்றும் 3 வரையிலான அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை சார்ந்து எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், இந்த வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வருகிறது என்பதாலும், வழக்கின் தன்மை கருதி, மேற்படி காவல் ஆய்வாளர் சார்பாக அவர் தயார் செய்து வைத்துள்ள கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 16.05.2023 ம் தேதி அன்று வட்ட காவல் ஆய்வாளர் மங்களமேடு காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது A. செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதனை பரிசீலனை செய்து அந்த புகாரின் தன்மைக்கேற்ப மங்களமேடு காவல் நிலைய குற்ற எண். 240/2023, இதச பிரிவுகள் 342,352,506(2) ன் படி வழக்கு பதிவு செய்தார். அந்த காவல் ஆய்வாளர் நிலையத்தில் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

3. பின்னர் காவல் ஆய்வாளர் வழக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருண், சாஜித் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடங்களுக்கு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ 3 ஆகவும், அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ 4 ஆகவும் குறியீடு**

**செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கு சம்பவஇடத்திலிருந்து கைப்பற்றுதல் மகஜர் மூலமாக 16.05.2023 ம் தேதியன்று 09.45 மணியளவில் சாட்சிகள் அருள், சாஜீத் ஆகியோர் முன்னிலையில் வழக்கு சொத்தான KL 09AU 1777 என்ற காரினை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றபட்டது. அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் உரிமைப் படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. **அந்த படிவம் 91 அ.சா.ஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது புகைப்படத்தில் உள்ள கார் வழக்கு சம்பவத்தில் எதிரிகள் பயன்படுத்திய வாகனம், **ஆகும். அந்த வாகனம் அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அ.த.சா.ஆ 7 ல் **உள்ள கார் அரசு சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் சாட்சிகள் செல்வராஜ், ஸ்ட்ரான்லி, விஸ்வநாத், சிவதாசன், சின்னசாமி, அருண், சாஜித் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் பெரம்பலூர் அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று தக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகிவிட்டார்கள் என்பதால் எதிரிகளை கைது செய்யவில்லை. இவ்வழக்கு சம்பவத்தில் பாதிப்படைந்ததாக சொல்லப்படும் சாட்சி ஸ்ட்ரான்லி என்பவருக்கு சாட்சிய சம்மன் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்டு அது வாங்க மறுத்துவிட்டார் என்ற குறிப்புடன் திரும்பிவிட்டது.

5. பின்னர் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தவகையில் எதிரிகளின் செய்கையானது, இதச பிரிவுகள் 342, 352, 506(2) ன் குற்றமென கடந்த 02.08.2023 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-**

1. இவ்வழக்கு சம்பவத்தில் சாட்சிகளான விஸ்வநாத், மற்றும் சிலர் கேரளாவை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தில் சொல்லப்படும் மேற்கண்ட அ.சா.1 மற்றும் அவருடைய நண்பர்கள் அடைத்து வைத்திருப்பதாக சொல்லப்படும் இடத்தின் உரிமையாளரையோ, அல்லது அந்த இடத்தில் அருகில் வசிக்கும் நபர்களை இந்த வழக்கில் ஒரு தரப்பு சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

2. இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் எதிரிகளுக்கிடையே நடந்த கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக கிரிப்டோ கரன்சி சம்பந்தமாகவும் விசாரித்து அது சம்பந்தமாக ஏதேனும் அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2 கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல்

DMCOURTKUMAM

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JM COURT, KUNNAM